**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 12.03.2024 |
| Case No. | : **O.S. 399/2019** | Nationality | : Indian |
| Name | : லியோனார்டு தேவசகாயம் | Religion | : |
| Father's/Husband's Name | : சந்தானம் | Age | : 46 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்திற்காக இழப்பீடை எனக்கு வழங்க கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரிதான். நான் எத்தனை ஆண்டுகளாக வெளிநாட்டில் வசித்து வருகிறேன் என்றால் நான் பிறந்தது முதல் வெளிநாட்டில் வசித்து வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேலகுடிக்காடு மேலத்தெரு என்ற முகவரியில் நான் வசித்து வருவதற்கான ஆதாரங்கள் ஏதும் உள்ளதா என்றால் அது என் மாமா வீடாகும். எனது தகப்பனார் சந்தானம் என்பவரும் வெளிநாட்டில் வசித்து வந்து அங்கேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். எங்கள் வம்சாவழி வெளிநாடு வாழ் இந்தியர் வம்சாவழி என்றால் சரியல்ல. எனது தாத்தா இந்திய நாட்டை சேர்ந்தவர். வாசாஆ 1 வம்சாவழி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகளை நிரூபணம் செய்வதற்கு இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்று போன்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வாசாஆ 1 வம்சாவழி வரைபடத்தில் எனது தகப்பனாரின் தாத்தா தேவசகாயம் என்பவரின் மனைவி உள்ளிட்ட வாரிசு விவரங்களை சரியாக குறிப்பிடவில்லை என்றால் அவரின் பெயர் தெரியாததால் குறிப்பிடவில்லை. தேவசகாயத்தின் மனைவி மற்றும் இதர வாரிசு விவரங்களை வாசாஆ 1 ஆவணத்தில் குறிப்பிடாததால் அந்த ஆவணம் எங்களால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 1, 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தாவா சொத்தில் புல எண்கள் நிரைய உள்ளது. அதில் புல எண் 127/11 மற்றும் புல எண் 100 மட்டும் எனக்கு ஞாபகத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் சம்மந்தமான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆர்எஸ்ஆர் மற்றும் பழைய செட்டில்மெண்ட் பதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் பதிவு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு சொந்தமானது என்பதை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எனது தாத்தா என்னிடம் சொல்லியுள்ளார். அதன் பிறகு மேற்படி ஆர்எஸ்ஆர் மற்றும் பழைய செட்டில்மெண்ட் பதிவேட்டினை பார்த்து தெரிந்து கொண்டேன். தாவா சொத்து குறித்து எனது தாத்தா சொன்னதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

நான் எனது வழக்குரையில் 03.12.2013 மற்றும் 20.05.2018 தினத்தந்தி விளம்பரபடி என்று தான் சொல்லியுள்ளேன் என்றாலும் எனது உரிமை மூல ஆவணங்களின்படி உரிமை கோரவில்லை என்றாலும் சரியல்ல. எனது வழக்கில் அந்தோணிசாமி, செல்வராஜ், ஜீவரத்தினம், செல்வின்ரிச்சர்ட், ஸ்டான்லிஜீன், சீன்ராபர்ட் மற்றும் சைமன்ஜேம்ஸ்

ஆகியோர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் அவர்களது அதிகார முகவர் என்ற பெயரில் அவர்களுக்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு மேற்படி நபர்களுக்கு அதிகார முகவர் என்ற பெயரில் இவ்வழக்கினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் கண்ட தாவா சொத்துக்களுக்கு நான்கெல்லைகள் மற்றும் நான்கு பக்க அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. விவரமாக குறிப்பிட்டுள்ளேன். 1ம் பிரதிவாதி புல எண் 127/11 ல் அடங்கிய சொத்தினை 29.11.1990 ம் தேதி கிரயம் வாங்கி உள்ளார் என்றாலும் அந்த தேதியிலிருந்து மேற்படி சொத்து அவரது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. மேற்படி சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் நான் இந்த வழக்கினை பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை பொறுத்து பொய்யாக ஆவணங்களை ஏற்படுத்தியதால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரத்தினை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

1, 3 பிரதிவாதிகளுக்கு இழப்பீடு கொடுக்ககூடாது என எந்த தேதியில் நான் ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் 8.05.2019 ம் தேதி வட்டாட்சியரிடம் ஆட்சேபனை தெரிவித்தேன். 12.6.2019 ம் தேதி மாவட்ட வருவாய் அலுவலரிடம் ஆட்சேபனை தெரிவித்தேன். மேற்படி 2 ஆட்சேபனைகளையும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் கொடுத்துள்ளேன் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை பொறுத்து எனது மூதாதையர் செல்வநாயகம்பிள்ளை என்பவர் 3 ம் பிரதிவாதி செல்வதுரையின் தகப்பனார் தம்புசாமிபிள்ளை என்பவருக்கு 1921 ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கிரயம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது போலியான ஆவணம் ஆகும். 3 ம் பிரதிவாதி புல எண் 127/16 ல் கண்ட சொத்தை பொறுத்து அவரது மகனுக்கு 2014 ம் வருடம் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால்

அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக எந்தவித உரிமைமூல ஆவணங்களும் இல்லாமல் தாவா சொத்துக்கள் பற்றிய எந்த விவரமும் தெரியாமல் 1,3 பிரதிவாதிகள் இழப்பீடு பெறுவதை தடுப்பதற்காக அவர்களுக்கு எதிராக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனார் காலத்தில் இருந்து வெளிநாட்டில் வசித்து வருவதால் தாவா சொத்துக்களின் அனுபவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும். இவ்வழக்கில் தேவசகாயத்தின் வாரிசு விவரங்கள் சரியாக கூறப்படாததாலும் அவரது இதர வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் இந்நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டது இல்லை என்றாலும் மாவட்ட நீதிமன்றத்தில்தான் பரிகாரம் கோரமுடியும் என்றாலும் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**4 ம் பிரதிவாதிக்கு எதிராக** நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்களுடைய சொத்து எங்களுக்கே திருப்பி தர வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளேன். தேவசகாயம் பிள்ளை எனது தாத்தாவின் தாத்தாவா என்றால் எனது தாத்தாவின் அப்பா ஆவார். தேவசகாயத்திற்கு செல்வநாயகம், சாமிதுரை, சவரிமுத்து ஆகியோர் மகன்கள் ஆவார்கள் என்றால் சரிதான். தேவசகாயத்திற்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. தேவசகாயத்திற்கு 2 மனைவிகள் என்றாலும் அவரது மூத்த மனைவியின் மகன் பெயரும் சவரிமுத்து என்றாலும் சரியல்ல. மேற்படி சவரிமுத்துவிற்கு தம்புசாமி பிள்ளை மற்றும் அமிர்தசாமி என்ற 2 மகன்கள் உள்ளார்கள் என்றாலும் அவர்களுக்கு நிரைய நபர்கள் வாரிசாக உள்ளார்கள் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் பெயர் சந்தானம் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் என்னையும் சேர்த்து 5 நபர்கள். செல்வன்ரிச்சர்ட், ஸ்டான்லிஜீன், சைமன்ஜேம்ஸ், ஷாண்ராபர்ட், ஆகியோர் என்

உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். மேற்படி என் உடன் பிறந்த சகோதரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை அவர்கள் எனக்கு பொது அதிகாரம் அளித்துள்ளதால் அவர்களை சேர்க்கவில்லை. மேற்படி பொது அதிகார ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞிரிடம் கொடுத்துள்ளேன். முதலில் தேவசகாயம் அவருக்கு பிறகு சவரிமுத்து அவருக்கு பிறகு சந்தானம் என்றால் சரிதான். நான் இவ்வழக்கினை தேவசகாயத்தின் வாரிசுகளாக விளம்புகை செய்யக்கோரிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சவரிமுத்து மற்றும் சந்தானம் பற்றி சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சவரிமுத்து மற்றும் சந்தானம் இறந்துவிட்டார்கள். எனது தகப்பனார் சந்தானம் 1990 ல் இறந்துவிட்டார். எனது தாத்தா சவரிமுத்து 1980 ம் ஆண்டு இறந்துவிட்டார். நான் மலேசியா குடிமகன் என்றால் சரிதான். எனக்கு இந்திய குடியுரிமை இல்லை என்றால் சரிதான்.

எனது வழக்குரையில் எனது தாத்தா மற்றும் எனது தகப்பனார் எப்போது இறந்தார்கள் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் இறந்ததை குறிப்பிட்டுள்ளேன் இறந்த தேதி குறிப்பிடப்படவில்லை. இவ்வழக்கில் கண்ட பரிகாரத்தில் எனது சகோதரர்களுக்கும் சேர்த்து பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா மற்றும் தகப்பனாரின் இறப்பு சான்றுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது தாத்தா மற்றும் தகப்பனாரின் வாரிசு சான்றுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாரிசு சான்று இல்லை. செல்வநாயகத்தின் மகன் பெயர் தேவராஜ் என்றால் சரிதான். தேவராஜின் மகன்கள் பெயர் என்னவென்றால் செல்வராஜ் மற்றும் ஜீவரத்தினம் ஆகும். மேற்படி செல்வராஜூக்கு 4 பெண் பிள்ளைகள் உள்ளது என்றால் சரியல்ல தவறு. செல்வராஜூக்கு எத்தனை வாரிசுகள் உள்ளார்கள் என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதியின் தாயார் பாத்திமா சிசிலி என்பவரை தெரியுமா என்றால் அவர்

தேவராஜின் மகள் ஆவார். தேவராஜின் சகோதரி அன்னம்மாள் என்றால் சரிதான். அன்னம்மாளின் மகன் 4 ம் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான்.

தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆர்எஸ்ஆர் மற்றும் பழைய செட்டில்மெண்ட் பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 7 மற்றும் 9 பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். வாசாஆ 4 அறிவிப்பு என்னால் கொடுக்கப்பட்டதுதான். மேற்படி அறிவிப்பில் 16 அயிட்ட சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் இவ்வழக்கில் தாவா சொத்துக்களாக காட்டப்பட்டுள்ளதா என்றால் அனைத்து சொத்துக்களும் காட்டப்படவில்லை. நான் தற்போது தமிழ்நாட்டில் எங்கு வசித்து வருகிறேன் என்றால் எனது மாமா வீட்டில் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் மற்றும் தாத்தா எங்கு இறந்தார்கள் என்றால் மலேசியாவில்தான் இறந்தார்கள். இவ்வழக்கில் திருவிடைமருதூர் மற்றும் கும்பகோணம் வட்டாட்சியரை சேர்த்துள்ளேனா என்றால் இல்லை வழக்கிற்கு யார் யார் தேவையோ அவர்களை சேர்த்துள்ளேன்.

நான் வழக்கில் தேவசகாயத்தின் வாரிசு என்று விளம்புகை செய்யக்கோரிதான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வட்டாட்சியரிடம் வாரிசு சான்று கேட்டு மனுதாக்கல் செய்தேனா என்றால் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தேன். அவர் வட்டாட்சியருக்கு மனுவை அனுப்பி வைத்தார். வட்டாட்சியர் மேற்படி மனுவிற்கு எனக்கு பதில் எதுவும் அளித்தாரா என்றால் பதில் அளித்தார் அதனை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்தேன். எந்த வட்டாட்சியர் எனக்கு பதில் அளித்தார் என்றால் திருவிடைமருதூர் வட்டாட்சியர் பதில் அளித்தார். வாசாஆ 9 ஆவணம் நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற ஆவணம் என்றால்

சரிதான். மேற்படி ஆவணத்தை 16.10.2018 ம் தேதி பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் மானம்பாடி கிராமத்திற்கான பழைய செட்டில்மெண்ட் பதிவேடு என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எங்களுக்கு சொந்தமான சொத்துக்களின் புல எண்களை நான் குறிப்பிட்டு காட்டியுள்ளேன்.

நான் குறிப்பிட்டு காட்யுள்ள பகுதியில் பெயர் மட்டும்தான் உள்ளது என்றாலும் புல எண் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல நான் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டு காட்டியுள்ள பகுதியில் முழு விவரமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வாசாஆ 9 ஆவணத்தை வைத்து மட்டும் தாவா சொத்துககள் எங்களின் குடும்ப சொத்து என்று அறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துககள் எங்களது பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றாலும் தாவா சொத்து நத்தம் வகைப்பாடு செய்யப்பட்டு 4 ம் பிரதிவாதி பெயரில் சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புல எண் 127/19 சொத்தைப் பொறுத்து 4 ம் பிரதிவாதி பெயரில் சிட்டா மற்றும் அடங்கல் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதேபோல் 4 ம் பிரதிவாதியின் தாயார் பெயரில் புல எண் 127/18 க்கான சொத்திற்கு சிட்டா மற்றும் அடங்கல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வருவாய் வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் தவறாக வழங்கப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக நான் நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்துள்ளேன். மேற்படி சிட்டா சம்மந்தமாக வருவாய் கோட்டாட்சியர் அல்லது மாவட்ட வருவாய் அலுவலரிடம் புகார் எதுவும் அளித்தேனா என்றால் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தேன். அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். தாவா சொத்து விவரங்களை நான் தினசரி நாளிதழ் விளம்பரத்தில்

வந்ததை வைத்துதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பழைய மற்றும் புதிய செட்டில்மெண்ட் பதிவேட்டின் மூலம் குறிப்பிட்டுள்ளேன்.

எதற்காக தாவா சொத்து விவரத்தை தினத்தந்தி விளம்பரபடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் நில எடுப்பு சம்மந்தமாக வந்த மேற்படி விளம்பரத்தில் தாவா சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். எனது தாத்தா பெயரில் பழைய செட்டில்மெண்ட் பதிவேடு உள்ளது என்பது குறித்து வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரை பக்கம் 5 பாரா 6 ல் தினசரி நாளிதழ் விளம்பர மூலமாகதான் எனக்கு தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நில எடுப்பு சம்மந்தமாக வந்த விளம்பரத்தை குறிப்பிட்டுள்ளேன். மேற்படி தினசரி நாளிதழ் விளம்பரம் வந்த காலகட்டத்தில் நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரிதான்.வாசாஆ 1 ஆவணம் என்னால் தயார் செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 8 புதிய செட்டில்மெண்ட் பதிவேட்டில் என்னால் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ள புல ண் 147/1 ல் கண்ட சொத்து தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளதா என்றால் தற்போது நம்பர் மாறியுள்ளதால் எனக்கு தெரியவில்லை. எனக்கு தாவா சொத்துக்கள் பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆவணங்களை பெற்று அதனடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

தாவா சொத்துக்கள் சம்மந்தமாக 9 ம் பிரதிவாதியால் 4 ம் பிரதிவாதிக்கு எதிராக தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் நில எடுப்பு வழக்கு எண் 136/2021 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் 4 ம் பிரதிவாதிக்கு எதிராக ரூ.9,00,000/- வைப்பீடு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் என்னை தரப்பினராக சேர்ப்பதற்கு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

நான் அவ்வாறு மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு மூலத்தில் சொல்லப்பட்டுள்ள தேதிகளில் நான் வெளிநாட்டில் இருந்தேன் என்றால் நாளிதழ் விளம்பர தேதிகளில் நான் வெளிநாட்டில் இருந்தேன். நான் வட்டாட்சியரிடம் மனு கொடுக்காமல் நேரடியாக விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் மதிப்பு ரூ.9,00,000/- என்பதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை விசாரிக்க நீதிமன்றத்திற்கு பண வரம்பு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

ஒப்பம்/-நா. சிவபழனி,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.